பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.50

கடர்: 6 பிரசோற்பத்தி ஸூ சித்திரை மீ 13 உ. வெள்ளிக்கிழமை [26-04-1991] UTHAYAN—A Lively National Tamil Daily கதிர்: 143

1000.00
781.54
218.46

# காரைநகர்ப் பகுதியில் கடும்சண்டை மூண்டது

## நேற்று முழுநாளும் தாக்குதல்கள்

யாழ்ப்பாணம், ஏப்ரல். 26

காரைநகர், ஊர்காவற்றுறை முகாம்களிலிருந்து ஒரேநேரத்தில் படையினர் வெளியேற முற்பட்டபோது அப்பகுதிகளில் கடும் சண்டை மூண்டது.

நேற்று முழுநாளும் இப்பகுதிகளில் வான் மற்றும் ஷெல் தாக்குதல்களும் கடற்பிரங்கித் தாக்குதல்களும் இடம் பெற்றன.

நேற்று அதிகாலை 4-30 மணியளவில் தோப்புக்காடு, சிநேசர் முகாம்களிலிருந்து வாகனங்கள் சகிதம் படையினர் முன்னேற முயன்ற போதே அவர்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சண்டை மூண்டது.

படையினருக்கு உதவியாக பொம்மர்கள், ஹெலிகள் இப்பகுதியில் மாறி, மாறித் தாக்குதல் நடத்தின.

கடற்படைக் கப்பல் ஒன்றிலிருந்தும், பத்து விசைப்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## ராணுவ கப்டன் மரணம்!

கொழும்பு, ஏப். 26

மூதூர் - தோப்பூரில் விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு உள்ளாகி மரணமடைந்த படையினரில் ஒருவர் கப்டன் அனுரத விஜவந்த என்று தெரிவிக்கப் படடிருக்கிறது.

அவரது தந்தை சமூக சேவைகள் திணைக்கள பணிப்பாளர் என்றும் அறிவிக்கப் பட்டது. [ஒ-எ]

## 6 இராணுவ காவலரண்கள் முல்லைத்தீவில் சேதம்!

### சிப்பாய் பலி; ஆயுதம் மீட்பு

நேற்று முன்தினம் அதிகாலை முல்லைத்திவுப் பகுதியில் விடுதலைப் புலிகள் திடீர் தாக்குதல் நடத்தி 6 இராணுவ காவல் அரண்களைச் சேதமாக்கினர்.

காவலரணில் இருந்த சிப்பாய் ஒருவர் இச் சம்பவத்தில் கொல்லப்பட்டார். அங்கிருந்த ஏனைய சிப்பாய்கள் ஓடித் தப்பிவிட்டனர்.

அதிகாலை 3-30 மணி தொடக்கம் காலை 5-30 மணி வரை தனிக்கல்லு— அரியகுண்டான் பகுதிகளுக்கு இடையேயுள்ள இராணுவ காவல் அரண்கள் மீதே தாக்குதல் நடத்தப்பட்டது.

அப்பகுதியில் இருந்து ரி 56—1 ரக துப்பாக்கி—1, ஐ. எம். ரவைகள் 182, ஜே. ஆர். கிறனேட்—1 என்பன புலிகளால் மீட்கப்பட்டன. [ஒ-5]

# பலாலி ஷெல் நாரந்தனையில்!

# 8 பொதுமக்கள் உயிரிழப்பு!!

### பலியானோரில் 7 பேர் ஒரே குடும்பம்!!!

யாழ்ப்பாணம், ஏப். 26

நேற்றுப் பிற்பகல் 2-30 மணியளவில் பலாலி முகாமில் இருந்து ஏவப்பட்ட ஷெல் நாரந்தனை தெற்கிலுள்ள ஒரு வீட்டின் மேல் விழுந்து வெடித்தது.

இந்தச் சம்பவத்தில் வீட்டில் இருந்த 8 பேர் துடிதுடித்து மரணமானார்கள். மற்றும் மூவர் காயமடைந்தனர். வீடும் சேதமடைந்தது.

உயிரிழந்த எண்மரில் எழுவர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் கணவன், மனைவி அவர்களது பிள்ளைகள் ஐவர் அடங்கிய ஒரும் பத்தினரே இந்தச் சம்பவத்தில் பரிதாபகரமான முறையில் இறந்து போயினர். உயிரிழந்த இன்னொரு சிறுமி உறவினர் என்று தெரிவிக்கப் பட்டது.

லாசர் நீனப்பர் [45 வயது], அவரது மனைவி விறிகிற்றம்மா [40 வயது], அவர்களது ஐந்து பிள்ளைகளான யூலியஸ் [16 வயது], நீற்றா [13 வயது], யூஜின் [10

[3 ஆம் பக்கம் பார்க்க]

## காங்கேசன் ஊழியர்கள் புத்தளம், காலிக்கு மாற்றம்

யாழ்ப்பாணம், ஏப். 26

காங்கேசன்துறை சிமெந்து கூட்டுத்தாபன தொழிற்சாலையில் கடமையாற்றிய 17 உத்தியோகத்தர்கள் புத்தளம், காலி சிமெந்து ஆலைகளுக்கு இடமாற்றம் செய்யப் பட்டுள்ளனர்.

இடமாற்றம் செய்யப்பட்டுள்ள 17 பேரில் பொறியியலாளர், முகாமி, தட்டெழுத்தாளர் ஆகியோர் அடங்குகின்றனர் என்றும்—

கொழும்பிலுள்ள தலைமையகத்தில் இருந்து அனுப்பப் பட்டுள்ள இடமாற்றக் கடிதங்கள் யாழ் நகரில் இயங்கி வரும் கூட்டுத்தாபனத்தின் தற்காலிக கிளையில் வைத்து உரியவர்களுக்கு வழங்கப் பட்டு வருகின்றன. என்றும் தெரியவருகிறது.

ஏற்கனவே ஒன்பது பொறியியலாளர்கள் புத்தளம் மற்றும் கொழும்புக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்தனர் என்றும்—

அந்த உத்தரவை ஏற்று அங்கு செல்லாதவர்களுக்கு சம்பளம் வழங்க வேண்டாம் என தற்போது உத்தரவு வந்திருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது [ஒ-3]

## திருமலை ஆலங்கேணியில் மோதல் சம்பவங்கள்

### 4 சிப்பாய்கள் காலை இழந்தனர்

யாழ்ப்பாணம், ஏப். 26

கடந்த செவ்வாய், புதன் கிழமைகளில் திருகோணமலை ஆலங்கேணிப் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும், ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்கும் பரவலாக மோதல் சம்பவங்கள் இடம்பெற்றன.

உப்பாறு, ஆலங்கேணி, குரங்குப்பாஞ்சான் ஆகிய முகாம்களிலிருந்து இராணுவத்தினர் வெளியேறி காட்டுப் பகுதிக்குள் முன்னேற முட்பட்ட போது மோதல்கள் இடம்பெற்றன.

செவ்வாயன்று இரு சிப்பாய்களும், புதனன்று இரு சிப்பாய்களும் விடுதலைப் புலிகளின் மிதி வெடிகளில் சிக்கி கால் இழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இராணுவத் தரப்பில் மேலும் சேதம் ஏற்பட்டிருக்

[3 ஆம் பக்கம் பார்க்க]

# தமிழர்களை அழித்துக் கொண்டு பேச்சுக்கு அழைப்பது வேடிக்கை

## புலிகள் பிரமுகர் கிட்டு பேட்டி

லண்டன், ஏப். 26

வடக்கு, கிழக்கில் தினசரி குண்டு வீசித் தமிழர்களை அழித்துக் கொண்டு, மறுபுறத்தில் பேச்சுவார்த்தைக்கு வருமாறு ஜனாதிபதி பிரேமதாஸ அடிக்கடி அழைப்பு விடுப்பது வேடிக்கையான விடயமாகும்:

—இவ்வாறு கூறினார் விடுதலைப்புலிகள் இயக்கப் பிரமுகர் திரு. சதாசிவம் கிருஷ்ணகுமார் [கிட்டு] பி பி ஸிக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே

[3 ஆம் பக்கம் பார்க்க]

## மொனராகலைப் பகுதியில் பாதுகாப்பு தீவிரம்!

### ஊர்காவலர்கள் அதிகரிப்பு

மொனராகலை மாவட்டத்தில் உள்ள 87 கிராமங்களில் ஊர்காவற் படையினரின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது.

அங்கு கூடுதல் ஆயுதங்களும் அனுப்பப்பட்டுள்ளன.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ரணதுங்க நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் இவ்வாறு தெரிவித்தார்.

ஆயுதங்களைப் பயன்படுத்தும் விதம் குறித்து மொனராகலைப் பகுதி கிராம இளைஞர்களுக்குப் பயிற்சியளிக்க விசேட அதிகாரிகளும் அங்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன ரென்றும்—

அக்கிராமங்களில் மேலதிக பொலீஸ் காவல் நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். [உ-ஏ]

### அச்சந்தி முரளி



அப்ப ...... கொழும்பிலை ஜேம்ஸ் பொண்ட் பாணியிலை இடிமுழக்க நடவடிக்கை என்று சொல்லுங்கோ......!

## கொழும்பு மாநகரில் திடீர் "தண்டர் போல்ற்"

தென்னிலங்கையில் கொழும்பிலும் ஆயுதப்படையினர் தங்கள் பெரும் நடவடிக்கையை முடுக்கிவிட்டிருக்கிறார்கள்.

'தண்டர் போல்ற்' என்ற புதிய இராணுவ நடவடிக்கை இப்போது கொழும்பு நகரில் தீவிரமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்க நேற்றும் பத்திரிகையாளர் மாநாட்டில் அறிவித்தார்.

இந்த 'தண்டர் போல்ற்' நடவடிக்கையின் போது தனிப்பட்டவர்கள், வீடுகள் ஹோட்டல்கள், விடுதிகள் வாகனங்கள் என்பன முன்னறிவித்தல் எதுவுமின்றி திடீர்திடீரென சோதனை செய்யப்படும். [அ-5]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

புதிய ஆங்கில தட்டச்சு இயந்திரம் விற்பனைக்கு உண்டு. ரவி அன் ராஜ் சிக் 77, பெரியகடை, யாழ்ப்பாணம். [16597]

### ஏலவிற்பனை

நல்லின பசு மாடுகள் நான்கு 1991 - 04 - 27 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும். யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கனா சாலை வீதி, திருநெல்வேலி. [இ/5128]

### தேவை

மலைவேம்பு விதை, வாகை விதை தேவைப்படுகிறது. மில்க்வைற், யாழ்ப்பாணம். [C/5127]

### மணப்பெண் தேவை

A/L சித்தியடைந்த யாழ். இந்து செவ்வாய்க் குற்ற முள்ள 33 வயது கொழும்பில் பிரபலமான வர்த்தகருக்கு தொழில் பார்க்கும் அல்லது தொழில் பாராத மணப்பெண் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். [16593]

### தொழிற்கல்வி

தட்டெழுத்து, சுருக்கெழுத்து அலுவலக நடைமுறைகள், கணக்கியல், ஆங்கிலம், STCA, ஸ்தாபிதம் 1977 அரசாலும், லண்டன் பிற்மனாலும் அங்கீகரிக்கப்பட்டது. 149 [37], சிவன் பண்ணை வீதி, [வைத்தீஸ்வரா வித்தியாலய அண்மை] யாழ்ப்பாணம். [16592]

### தராதரப் பத்திரம்

தமிழ் / ஆங்கில தட்டெழுத்து, சுருக்கெழுத்தில் வேகம் மற்றும் செயல் திறன்களை எங்கள் நிலையத்தில் பரீட்சித்து அரசாலும், லண்டன் பிற்மனாலும் மற்றும் பரவலாக அங்கீகரிக்கப்பட்டு வருகிற எங்கள் தராதரப் பத்திரத்தைப் பெறுங்கள். STCA, 149 [37], சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம். [16590]

### ஜோதிடம்

சகலவிதமான பிரச்சினைகளும் ஜோதிடம் மூலம் அறிந்து சொல்லப்படும். பலன் நடைபெறாவிடில் பணம் திரும்பப் பெற உத்தரவாதம். அருட்சக்தியின் பதில் இலவசமாக அனுப்பப்படும். விபரம் நேரில் அல்லது முத்திரைக் கவர் அனுப்பி பெறலாம். ஸ்ரீமாவை விநாயகர் ஜோதிட நிலையம், 146 [402], பருத்தித்துறை வீதி, நல்லூர். [16586]

### லண்டன் பரீட்சைகள்

10 - 6 - 1990 இல் நடைபெற்ற பிற்மன் பரீட்சையின் பெறுபேறுகள் கிடைத்துள்ளன. 1991 நவம்பர் பரீட்சையின் விண்ணப்ப முடிவு 31 - 7 - 1991 வெளி மாணவர்களும் தோற்றலாம். STCA, 149 [37], சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம். [16591]

### வகுப்புக்கள்

Pitmans [London] ஆங்கில Short-Hand & Typing வகுப்புக்கள் 1 - 5 - 1991 இல் ஆரம்பமாகின்றன. School of Business Administration 16, 3rd Cross Street, Jaffna [சி-4905]

### இலவசம்

அகத்தி விதை இலவசம். ரூ 2-00 அஞ்சல் முத்திரை அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும். மில்க்வைற் யாழ்ப்பாணம். [C/5126]

---

## 'A' LEVEL CENTRE

உயர் தராதர கல்வி நிலையம்
Point - Pedro Road,
1st Lane, Jaffna.

**92 BATCH**

அசேதன இரசாயனம்

ஆரம்பம்: 27-04-1991 (Sat.)
Sat., & Sun — 4-30 p.m.
ஆசிரியர்: Mr. நாகரட்ணம் B.Sc. [4902]

---

## ★ ஜொலிஸ்ரார் ★ விளையாட்டுக் கழகம்

மேற்படி கழகத்தின்
வருடாந்தப் பொதுக்கூட்டம்

1991 - 05 - 05 காலை 9 - 30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் சகல கழக அங்கத்தவர்களும் புதிதாக அங்கத்துவம் பெற விரும்புபவர்களும் தவறாது சமுகமளிக்கவும்.

கௌரவ செயலர்:
[சி-4904] ஜொலிஸ்ரார் வி. க யாழ்ப்பாணம்.

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

### அருணாசலம் தம்பிப்பிள்ளை

[நெடுங்காடு காரைநகர்]

தோற்றம்: 22 - 10 - 1902 மறைவு: 27 - 03 - 1991

அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

அன்னார் 27 - 03 - 1991 இல் காலமானார். தற்போதைய சூழ்நிலையின் காரணமாக அவரது மரணம் குறித்து அறிவிக்காதமைக்கு மனம் வருந்துகிறோம்.

திருமதி நி நடராசா [மகள்]
நெடுங்காடு, காரைநகர். [16574]

---

## 6ஆம் ஆண்டு நினைவு தினம்



அமரர்

### உருக்குமணி இராசரத்தினம்

[இளைப்பாறிய ஆசிரியை, வேலணை]

மலர்வு: 15 - 05 - 1914 நிறைவு: 02 - 05 1985

திதி: 26 - 04 - 1991

விருத்தம்

ஆசிரியை உருக்குமணி அமரராகி
ஆறாண்டு நினைவாகும் நாட்களில்லை
பூசித்து மக்களும் படங்கள் வைத்துப்
பூமாலை சூடிவிளக் கேற்று கின்றார்
நேசித்த மருமக்கள் பேரமக்கள்
நினைவுகூர் துணைவரொடு சூழல் சுற்றம்
காசினியில் நீர் வாழ்ந்த போது செய்த
கடமைகளை எடுத்தோதி வியக்கின் றாரே.

வைத்தியர் சி. இராசரத்தினம் [ஜே. பி]
[கணவர்]
மக்கள் மருமக்கள், பேரமக்கள்.

''மலரகம்''
வேலணை கிழக்கு,
வேலணை. [16587]

---

## கல்வாரி தேவாலய பிரதிஷ்டை ஆராதனை

27 - 04 - 1991 சனிக்கிழமை மாலை 4 00 மணிக்கு நடைபெறவிருக்கும் ஆலய பிரதிஷ்டை ஆராதனையில் கலந்துகொள்ளுமாறு விசுவாசிகள், அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

போதகர்
''கல்வாரி தேவாலயம்''
[16588] பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

---

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் டாக்டர்

### நடராசா விஜயேந்திரன் [ஜே.பி.]

[கைதடி, அரசினர் ஆயுர்வேத வைத்தியசாலை வைத்திய அதிகாரி, அகில இலங்கை சமாதான நீதிபதி]

தோற்றம்: 02 07 1944 உதிர்வு: 18-04-1989 திதி: 26 04-1991

நீ பெற்ற பிள்ளைகள் எமை வந்து ''அப்பா''
தான் எங்கே போனார்
நீ கொட்டும் இந்தக் கேள்விக்கு என்ன
பதிலைது சொல்வோம் துரையே!
சீ என்று யாரும் சொல்லா வகையிற்
சிறப்போடு வாழ்ந்த தலைவா
நீ சென்ற பாதை ஏதென்றறியோம்
நிலை மாறி ஏங்குகின்றோம்.

அன்னாரின் பிரிவால் வாடும்:
மனைவி: — விமலா விஜயேந்திரன்,
பிள்ளைகள்: — ஜனகன், ஜயந்தன். ஜனனி,
மற்றும் குடும்பத்தினர், நண்பர்கள்.

இலஸ் தான்,
நல்லூர், யாழ்ப்பாணம். [16603]

---

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 17 — 07 — 1957 மறைவு: 26 — 04 — 1988

### அமரர் கந்தையா சற்குணசிங்கம்

[கோணேஸ் ரயர் வேக்ஸ் உரிமையாளர், மல்லாவி]

இவரின் பிரிவால் வாடும்;
தாய், மனைவி, மக்கள்,
சகோதரர்கள், மருமக்கள்.
[16580]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### பரீட்சையும் ஊரடங்கும்

கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் நடைபெறாமல் ஒத்தி வைக்கப்பட்ட ஜி. சீ. ஈ உயர்தரப் பரீட்சை, தமிழ்ப் பகுதிகளில் இம்மாதம் 23 ஆம் திகதி — இரண்டு நாட்களுக்கு முன்னர்தான் — ஆரம்பமாகியது.

கொழும்பில், கல்விப் பகுதியில் பல தடவைகள், பல மேல்மட்ட அதிகாரிகள் கலந்து பேசி, ஆராய்ந்து, சாதக பாதகங்களை எடைபோட்ட பின்னரே பரீட்சைத் திகதி நிர்ணயிக்கப்பட்டது.

அந்த மாநாடுகளில் எல்லாம் கூட்டுப்படைத் தலைமையகத்தைச் சேர்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர். பரீட்சைத் திகதியை நிர்ணயிப்பதற்காக ஆகக் கடைசியாக நடந்த மாநாட்டிலும் பாதுகாப்புப் படை அதிகாரிகள் கலந்து கொண்டு பரீட்சை குழப்பமில்லாமல் அமைதியாக நடப்பதற்குத் தமது முழு ஒத்துழைப்பையும் தருவதாக வாக்குறுதி அளித்தார்கள்.

ஆனால் நேற்று நடந்தது என்ன? பரீட்சை தொடங்கிய மூன்றாம் நாளே தமிழ் மாணவர்கள் நிம்மதியாக, மன அமைதியுடன் பரீட்சை எழுத முடியாத ஒரு பதற்ற நிலை தோற்றுவிக்கப்பட்டது.

இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்தது. வியாழக்கிழமை [நேற்று] காலை 6 மணி தொடக்கம் குடாநாட்டில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டதாக கூட்டுப் படைத் தலைமை அலுவலகமே அறிவித்தது!

அரசாங்கத்தின் சார்பில், கூட்டுப்படைத் தலைமை அலுவலகம், வானொலி மூலம் அறிவிக்கும் ஊரடங்குச் சட்டத்தை தமிழ்ப் பகுதி மக்கள் இப்போது கவனத்தில் கொள்வதில்லை, பொருட்படுத்துவதில்லை.

இருப்பினும், ஊரடங்குச் சட்டம் என்றதும், விமானங்கள் வரலாம். குண்டுகள் போடலாம்; பரீட்சை நிலையத்திற்கு மாணவர்கள் கூட்டமாகச் செல்லும் போது ஹெலி வந்து சுடலாம் என்ற அச்ச உணர்வு, பதற்ற நிலை மாணவர்களுக்கு ஏற்படவே செய்யும். அவர்கள் மனம் பிதுங்கிய நிலையிலேயே, பதற்றமான உணர்வுடனேயே விடை எழுத நேரிடும்: அதனால் அவர்களின் முழுத் திறமையையும் வெளிக்கொணர முடியாத நிலை உருவாகியிருக்கிறது.

தமிழ் மாணவர்களின் கல்வி வளர்ச்சியை, முன்னேற்றத்தைத் தடுப்பதில், முட்டுக்கட்டை போடுவதில் சிங்கள அரசுகளுக்கு எப்போதுமே அலாதி விருப்பம்!

தமிழர்களின் பறித்தெடுக்கப்பட்ட வாழ்வுரிமைகளில் கல்வி வசதி உரிமையும் ஒன்று; அவர்களின் அரசியல், பொருளாதார, சமூக விடிவுத் தேடலுக்கான உந்து சக்தியாக விளங்கும் கல்வியை உடைத்து விடவேண்டும் என்பது தென்னிலங்கை அரசாங்கங்களின் நீண்ட காலத்திய திட்டம்.

அதனையே பரீட்சைக் காலத்தில் நடத்தப்படும் இராணுவத் தாக்குதல்களும், ஊரடங்கு உத்தரவும் பிரதிபலிக்கின்றன. அரசின் தோளுக்கு மேல் உயர்ந்து விட்ட, மேலாண்மை பெற்று விட்ட, நாட்டை ஆளும் இராணுவம் - கூட்டுப்படைத் தலைமை அலுவலகம் — அரசை விஞ்சி இதனையும் செய்யும்; இப்படி எது எதையோ எல்லாம் செய்யும்!

## யாழ். இந்துவுக்கு புதிய அதிபர்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் புதிய அதிபராக, தற்போது கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபராகக் கடமையாற்றும் திரு அ பஞ்சலிங்கம் எதிர்வரும் வியாழக்கிழமை முதல் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

யாழ் இந்து அதிபர் திரு. இ. குகதாசன் ஓய்வு பெறுவதை அடுத்து அந்த இடத்துக்கு திரு. பஞ்சலிங்கம் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

கொக்குவில் இந்துவின் தற்போது உபஅதிபராக கடமையாற்றும் திரு. இ. மகேந்திரன் எதிர்வரும் வியாழன் முதல் அக்கல்லூரியின் பதில் அதிபராகப் பொறுப்பேற்பார்.

## சிறுமி கால் இழப்பு

நேற்று வவுனியா பூந்தோட்டம் பகுதியில் இராணுவத்தினரின் மிதி வெடியில் சிக்கி செல்வராசா சுகந்தினி [வயது 10] என்ற சிறுமி தமது இடது காலை இழந்தார். [உ-5]

## நாளை கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 26

யாழ் பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகத்தின் அங்கத்தவர்களுக்கான பொதுக்கூட்டம் நாளை காலை 10 மணிக்கு பல்கலைக்கழக செல்வநாயகம் மண்டபத்தில் நடைபெறும் [உ]

## கருத்தரங்கு

தமிழ்ச் சேவைக்கால ஆசிரியர் ஆலோசகர்களுக்கான கருத்தரங்கு நாளை காலை 9.00 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த தமிழ் மொழிக் கல்விக் கருத்தரங்கில் சகல தமிழ் சேவைக்கால ஆசிரியர் ஆலோசகர்களையும் பங்கு பற்றும்படி கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். [ஒ]

### பயிற்சிப் பாசறை

யாழ்ப்பாணம், ஏப். 26

புனித கிறிஸ்தோப்பர் சுடர் சாரணர் குழுவின் மூன்று நாள் பயிற்சிப் பாசறை யாழ். பிரதான வீதியில் உள்ள திருமறைக் கலா மன்ற வளவில் நேற்று ஆரம்பமானது.

## ஒரு தொகுதியில் 129 பேர் போட்டி

சென்னை, ஏப். 26

தமிழ்நாடு சட்டசபைக்கு சோளிங்கபுரம் தொகுதியில் போட்டியிட நேற்று வரை 129 வேட்பாளர்கள் நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்தனர் என்று தெரிவிக்கப் பட்டது. [ஓ-எ]

## கவிஞருக்கு கலாநிதிப் பட்டம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 26

கவிஞர் காரை. செ. சுந்தரம்பிள்ளைக்கு யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் கலாநிதிப் பட்டம் வழங்கியுள்ளது.

இவர் ஏற்கனவே கல்வியியலில் எம். ஏ. பட்டத்தையும், ஊளவியலில் எம். பில். பட்டத்தையும் பெற்று இப்போது நாடக ஆய்வில் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுள்ளார்.

லண்டன் பல்கலைக்கழக பட்டதாரியான பின்னர் அவர் தமிழறிஞர் கந்த முருகேசனார் அவர்களிடம் ஓர் ஆண்டு காலம் குருகுலக் கல்வியை மேற்கொண்டவர்.

ஆசிரியராகத் தொழிலை ஆரம்பித்த கவிஞர் காரை. சுந்தரம்பிள்ளை தலவாக்கொல்லை ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபராகப் பணியாற்றி தற்பொழுது கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் முதித விரிவுரையாளராகக் கடமை புரிகிறார்.

சங்கிலியன் [1970], தேனாறு [1968] ஆகிய இரு நூல்கள் சாகித்திய மண்டலப் பரிசினைப் பெற்றன.

# சங்கீதப் பரீட்சை

# நாளை ஆரம்பம்

## நிலையங்களும் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப், 26

வட இலங்கை சங்கீத சபையின், 91 ஆம் ஆண்டுக்குரிய தரம் ஒன்று தொடக்கம் தரம் நான்கு வரையிலுமான பிரிவுகளுக்குரிய செய்முறைப் பரீட்சை நாளை 27 ஆம் திகதி தொடக்கம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சங்கீதத்திற்கான அனுமதிப் பத்திரங்கள், நேர அட்டவணைகள் ஆகியவற்றை, தகுந்த அத்தாட்சிகளைக் காட்டி பரீட்சை நிலையங்களுக்குப் பொறுப்பான பரீட்சகரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

பரதம், பண்ணிசை, கதகளி, மிருதங்கம் ஆகிய பாடங்களுக்குரிய அனுமதிப் பத்திரங்கள் தபாலில் அனுப்பப்பட்டுள்ளன என்றும்—

கிடைக்காதவர்கள் அந்தந்தப் பரீட்சை நிலையப் பிரதம பரீட்சகருடன் தொடர்பு கொண்டு பெறலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தெரிவு செய்யப்பட்ட நிலையங்களுக்குரிய பரீட்சை நிலையங்கள் வருமாறு:—

★ யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை [சங்கீதம், பரதம்] — யாழ். புனித மரியாள் றோ. த. க. பா.

★ யாழ்ப்பாணம், கோப்பாய், உடுப்பிட்டி, பருத்தித்துறை, சாவகச்சேரி [மிருதங்கம்] — யாழ் மத்திய கல்லூரி.

★ நல்லூர் [சங்கீதம், பரதம்] — நல்லூர் இந்து த. பெ. பா.

★ நல்லூர், மானிப்பாய், வட்டுக்கோட்டை [மிருதங்கம்] — யாழ். இந்து ஆரம்ப பாடசாலை.

★ மானிப்பாய், தெல்லிப்பளை [சங்கீதம், பரதம்] — இணுவில் அ மி த க. பா,

★ எல்லா நிலையங்களுக்குமுரிய [பண்ணிசை, நாடகம்] — இணுவில் சைவ மகாஜன ம. வி.

★ வட்டுக்கோட்டை [சங்கீதம், பரதம்] — பண்ணாகம் மெய்கண்டான் ம. வி.

★ கொக்குவில் [சங்கீதம், பரதம்] — பெரியபுலம் ம வி.

★ கொக்குவில், தெல்லிப்பளை [மிருதங்கம்] — கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை.

★ கோப்பாய் [சங்கீதம், பரதம்] — கோப்பாய் நாவலர் வித்தி

★ பருத்தித்துறை [சங்கீதம், பரதம்]—பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தி

★ உடுப்பிட்டி [சங்கீதம், பரதம்] — கரவெட்டி திரு இருதயக் கல்லூரி.

★ சாவகச்சேரி [சங்கீதம், பரதம்] — நுணாவில் அமிர் தாம்பிகை வித்தி.

வவுனியா, முல்லைத்தீவு. கிளிநொச்சி, மன்னார் [சங்கீதம், பரதம்] — கிளிநொச்சி புனித திரேசா மகளிர் ம. வி.

### கடும் போக்காளர் கண்டனம்:

## ராஜினாமாச் செய்ய முன்வந்தார் கோர்பச்சேவ்!

மாஸ்கோ, ஏப். 26

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் ஜனாதிபதி மிக்கெய்ல் கோர்பச்சேவ் நாட்டின் அரசியல் மற்றும் பொருளாதாரக் கொள்கைகளைக் கையாளும் விதம் குறித்து கடும் போக்காளர்கள் கண்டனம் தெரிவித்தனர்.

அதனைத் தொடர்ந்து கட்சியின் பொதுச்செயலாளர் பதவியை ராஜினமாச் செய்ய திரு கோர்பச்சேவ் முன்வந்தார் என்று பி. பி. ஸி. அறிவித்தது.

கூட்டத்தில் கலந்து கொண்டவர்களில் 70 சத விதமானோர் திரு கோர்பச்சேவின் ஆட்சி முறையைக் கண்டித்தனர் என்று அக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களில் ஒருவர் பி. பி. ஸிக்குத் தெரிவித்திருந்தாராம்.

அதேசமயம் திரு: கோர்பச்சேவின் ராஜினமாவை ஏற்க பெரும்பாலான உறுப்பினர்கள் மறுத்து விட்டனர். [ஓ-எ]

## தமிழர்களை . . .

அவர் இப்படித் தெரிவித்திருக்கிறார். அப்பேட்டியில் அவர் மேலும் கூறியிருப்பதாவது:-

சமரசத் தீர்வுக்கோ சமாதான முயற்சிக்கோ நாம் எதிரானவர்கள் அல்லர். நாமும் பேச்சுவார்த்தைக்கு தயார் என்று கூறுகிறோம்.

ஆனால் தமிழ் மக்களால் ஏற்க முடியாத-போராட்டத்தைக் கொச்சைப்படுத்தும் வகையில் நிபந்தனை விதிக்கும்-பிரேமாவின் அழைப்பை ஏற்கமுடியாது.

தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அவர் தயாரில்லை;

வன்முறைகளைக் கைவிடுவதாக அறிவிக்குமாறு இப்போது அவர் கூறுகிறார்,

"வன்முறை மீதோ அல்லது ஆயுதங்கள் மீதோ நாம் விருப்பம் கொண்டவர்கள் அல்லர். ஆயுதத்தைத் தூக்க நாம் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம்" — என்று தலைவர் பிரபாகரனே பலமுறை கூறியுள்ளார்.

இன்று தற்காலிகமாக ஏற்படக்கூடிய அமைதி, நாளை எமது மக்களின் உரிமைக்கும், உயிருக்கும் பங்கமாகிப் போவதை நாம் அனுமதிக்க மாட்டோம்.

தமிழர்களால் ஏற்றுக் கொள்ள முடியாத தீர்வு அவர்கள் மீது திணிக்கப்பட்ட போதே 1987 ஆம் ஆண்டில் யுத்தம் வெடித்தது; இரத்த ஆறு ஓடியது; தமிழர்கள் படுகொலையுண்டார்கள்.

ஆனால் காலச்சக்கர ஓட்டத்தில் இந்தியா பின்வாங்கியது;

எனினும் 1987 ஸ்ரீலங்கா — இந்திய ஒப்பந்தத்தை மீண்டும் நடைமுறைப்படுத்த இந்தியா இப்போது முயன்று வருகின்றது.

சென்ற முறை போல் அல்லாமல் இந்த முறை தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக விடுதலைப் புலிகளை ஏற்று அவர்களைக் கலந்தாலோசித்துத் தீர்வு ஒன்றுக்கு வந்தால்தான் அது ஏற்புடையதாக அமையும் என்பதை இந்தியாவுக்குக் கூறி வைக்க விரும்புகிறோம் — என்றார். [உ-3]

## திருமலை . . .

களாம் என்று நம்பப்படுகிறது.

இப்பகுதிகளிலிருந்து மீளவும் முகாமுக்குத் திரும்பிய படையினர் வழியில் தென்பட்ட பல பொதுமக்களைப் பணயக் கைதிகளாக தங்களுடன் பிடித்துச் சென்றனர். இவ்வாறு கொண்டு செல்லப்பட்டவர்கள் என்ன ஆனார்கள் என்பது குறித்து தகவல் ஏதும் கிடைக்கவில்லை [உ]

## காரைநகர்ப் பகுதியில் . . .

படகுகளிலிருந்தும் விடாது பீரங்கித் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

காரைநகர் முகாமிலிருந்தும் கடற்படைக் கப்பல்களிலிருந்தும் ஏவப்பட்ட பீரங்கி மற்றும் ஷெல் குண்டுகள் காரைநகர்ப் பகுதியில் விழுந்து வெடித்ததில் அங்கு பலத்த சேதம் ஏற்பட்டது.

இடைப்பிட்டி குடியிருப்புகள், டிப்போ பகுதி, தாலையடி, கருங்காலி, பாலாவோடை, களபூமி, வலந்தலை, புதுறோட், பொன்னாவளை, மருவடி ஆகிய பகுதிகளில் ஷெல் மற்றும் விமானக் குண்டு வீச்சினால் பல வீடுகள் சேதமுற்றன.

இதேவேளை—

ஹெலியிலிருந்து நடத்தப்பட்ட றொக்கட் தாக்குதலில் நாரந்தனைப் பகுதியில் றோமன் கத்தோலிக்க மகா வித்தியாலயம் பலத்த சேதமடைந்ததாக முதலில் கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

மோதல் மூண்டதை அடுத்து காரைநகர்ப் பகுதியிலிருந்த மக்கள் அங்கிருந்து கூட்டம் கூட்டமாக வெளியேறினர்.

இவ்வாறு வெளியேற முற்பட்ட ... ஹெலிக்கொப்டர்கள் ... துரத்திச் சுட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக பொன்னாலைப் பாலம் வழியாக காரைநகருக்கான போக்குவரத்து துண்டிக்கப்பட்டது. இதனையடுத்து மக்கள் கடல் பாதை வழியாக நீந்தி வெளியேறும் முயற்சியில் ஈடுபட்டனர்.

போக்குவரத்துத் துண்டிக்கப்பட்டதால், காரைநகர்ப் பகுதியில் நேற்றுத் தங்கியிருந்த பல பொதுமக்கள் குறித்து தகவல்கள் அறிய முடியாத நிலை நேற்று மாலை நிலவியது.

இதே சமயம்—

சுழிபுரம், பொன்னாலைப் பகுதியிலிருந்து நேற்று முன்தினம் இரவு தொழிலுக்குச் சென்ற மீனவர்கள் பலர் நேற்று மாலை வரை வீடு திரும்பவில்லை என்று மற்றொரு செய்தி தெரிவித்தது.

இதே சமயம்—

பலாலியிலிருந்தும் நேற்றுப் பகல் முழுவதும் காரைநகரை நோக்கி ஷெல் குண்டுகள் அடிக்கடி ஏவிவிடப்பட்டன. இந்த ஷெல் குண்டுகள் காரைநகர், ஊர்காவற்றுறை, தம்பாட்டி, சரம்பன். செருக்கன் பகுதிகளில் விழுந்து பெரும் சத்தத்துடன் வெடித்தன.

ஊர்காவற்றுறை முகாமிலிருந்தும் சின்னமூளாய், கரம்பன், தம்பாட்டிப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

நாரந்தனை, கரம்பன், அராலித்துறை, வேலணை, சரவணை, புளியங்கூடல் ஆகிய பகுதிகளில் விமானத்திலிருந்து றொக்கட் தாக்குதலும், ஹெலிக்கொப்டர் தாக்குதல்களும் நடத்தப்பட்டன.

நேற்று நடந்த சண்டையில் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட சேத விவரங்கள் தெரியவரவில்லை.

விடுதலைப் புலிகள் தரப்பில் குமார் என்ற போராளி வீரமரணம் அடைந்தார்.

[உ-3-5-15-28-125]

## பலாலி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வயது], சுவர்ணா [8 வயது], திரேசா [5 வயது] ஆகிய எழுவரும் உறவினரான அலோஸியஸ மற்றில்டா [12 வயது] ஆகியோரே உயிரிழந்த எண்மரும் ஆவர்.

இறந்த பெண்மணியான விறிசிற்றம்மாவின் தந்தையான சவுரி இறப்பியல் [75 வயது] மற்றும் அலோசியஸ் அருள்சீலன் [15 வயது] ஆகிய இருவரும் காயமடைந்துள்ளனர். [ஓ-15]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி மனோன்மணி அப்பாத்துரை

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த திருமதி மனோன்மணி அப்பாத்துரை 23 - 4 - 1991 அதிகாலை காலமானார். அன்னார் காலஞ்சென்ற மலாயன் பென்ஷனர் அப்பாத்துரையின் அன்பு மனைவியும், தனபாலசிங்கம் [கச்சேரி, கிளிநொச்சி], சரோஜினிதேவி, பூபாலசிங்கம் [இளைப்பாறிய ஆசிரியர்], கௌசலாதேவி, மகேஸ்வரன் [கனடா], ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சுலோச்சனா, சோமசுந்தரம், கமலா, காலஞ்சென்ற சிவராஜா, பொன்னம்பலம் ஆகியோரின் அருமை மாமியாரும், காலஞ்சென்ற நளாயினி, பிரபாகரன் [U. S. S. R.], பாலச்சந்திரன் [அவுஸ்திரேலியா], வாசுகி, விக்னேஸ்வரன் [கனடா], தேவகி, அரவிந்தன் [ஜேர்மனி], நரேந்திரன் [கனடா], விஜேந்திரன் [U S. A] ஆகியோரின் ஆசைப்பாட்டியும், தட்ஷாயினி, துஷ்யந்தி, ஆர்த்தி, நிரோஷினி, நிருஷன், ஐங்கரன், ஆகியோரின் பிரியமுள்ள பூட்டியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 23-4-1991 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவில் சங்கரப்பிள்ளைவீதி ஆனைக்கோட்டை இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் ஆனைக்கோட்டை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :

குடும்பத்தினர்

சங்கரப்பிள்ளை வீதி,
ஆனைக்கோட்டை. [16599]

## அம்பலவாணர் பரமநாதன்

சரம்பொனைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் வண்ணார்பண்ணை வட - மேற்கை வசிப்பிடமாகக் கொண்டவருமான அம்பலவாணர் பரமநாதன் 25 - 04 - 91 இல் காலமானார்.

இவர் சரஸ்வதியின் அன்புக் கணவரும், நித்தியானந்தன், காலஞ்சென்ற தவமலர், நித்தியானந்தம் [ரகு] விபியா, அகிலன் ஆகியோரின் அன்புத் தந்தையும், தில்லைநாயகி, வசந்தலா, ரஞ்சனி ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

இறுதிச் சடங்குகள் அன்னாரது இல்லத்தில் 26 - 4 - 91 இன்று காலை 10 மணிக்கு நடைபெற்று தகனக் கிரிகைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டப்படுகிறார்கள்.

தகவல்:

நித்தியானந்தன்
[மகன்]

கேசாவில் பிள்ளையார் கோவிலடி,
வண் - வட - மேற்கு,
யாழ்ப்பாணம். [16609]

## திருமதி ஈஸ்வரி அப்பாத்துரை

தொல்புரத்தைச் சேர்ந்த திருமதி ஈஸ்வரி அப்பாத்துரை 24-04 91 புதன்கிழமை இரவு இறைவனடி சேர்ந்தார். இவர் ஓய்வு பெற்ற பொறியியலாளர் செல்லப்பா அப்பாத்துரையின் அன்பு மனைவியும், செல்வராசன் [டென்மார்க்], செல்வமலர், பளவராஜன் [நீர்ப்பாசன இலாகா, வவுனிக்குளம்], இன்பமலர், திவ்வியரஞ்சனி ஆகியோரின் அருமைத் தாயாரும், வெற்றிவேலாயுதம் [கல்வித் திணைக்களம், பண்டத்தரிப்பு], சயந்தனி [டென்மார்க்], வசந்தி, மாணிக்கவடிவேல் ஓய்வு பெற்ற கால்நடை வைத்தியர்], கிருஷ்ணகுமார் [கொழும்பு] ஆகியோரின் அருமை மாமியாரும், காலஞ்சென்ற திருமதி சின்னபுஷ்பபாக்கியம், திருமதி கந்தையா சரஸ்வதி [லண்டன்], திரு. அம்பலவாணர் வரதராசா [ஓய்வு பெற்ற occupational therapist] ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற தொல்புரம் விதானையார் செல்லப்பா கந்தையா, காலஞ்சென்ற வைத்திய கலாநிதி செல்லப்பா நடராசா [மலேசியா], திருமதி ஞானாம்பிகை வரதராசா ஆகியோரின் அன்பு மைத்துனியும், திருமதி இராசபுஷ்பம் ஈஸ்வரகரன் [லண்டன்], திரு கந்தையா கனகராயர் [மேற்கு ஜேர்மனி], திருமதி ஆனந்தபுஸ்பம் ஸ்ரீகரன் [லண்டன்], திருமதி இராசேஸ்வரி நடராசாவின் பிள்ளைகள் [மலேசியா] ஆகியோரின் அருமைச் சிறியதாயாரும், சுஜாதா, வரலட்சுமி, செல்வகௌரி, செல்வாவன், தர்ஷாந்தி, மயூரன், பிரசன்னா, குமரன், பிரதீபன், பிரதாபன் ஆகியோரின் அருமைப் பேர்த்தியுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் தொல்புரத்திலுள்ள அன்னாரது இல்லத்தில் 26 04-91 வெள்ளிக்கிழமை நடைபெற்று பூதவுடல் பொன்னாலை குடும்ப மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:

செ. அப்பாத்துரை
[கணவன்]

[16607]

## வலி. வடக்கில் ஹெலித் தாக்கு

காங்கேசன்துறை, ஏப். 26

வலி. வடக்குப் பகுதியில் நேற்று ஹெலித் தாக்குதல் இடம்பெற்றது.

காலை 8 மணிக்கும் பிற்பகல் 10 மணிக்கும் தெல்லிப்பளை, கட்டுவன், ஏழாலைப் பகுதிகளில் தாக்குதல்கள் நடத்தப்பட்டன

இதே சமயம்—

நேற்று முற்பகல் 10 மணியளவில் சுன்னாகம் பகுதிகளில் இரு பொம்மர்கள் பறந்து மக்களைப் பயமுறுத்தின. [ஓ-68]

## தேவிலால் லோக்பூரில்

புதுடில்லி, ஏப். 26

துணைப் பிரதமர் தேவிலால் நேற்று ஹரியானா-லோக்பூர் லோகசபைத் தொகுதியில் போட்டியிடுவதற்காக வேட்புமனுவைத் தாக்கல் செய்தார்.

தமக்கு வயதாகி விட்டதாகவும், எதிர்வரும் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என்றும் 77 வயதான திரு. தேவிலால் முன்னர் கூறியிருந்தார். [ஓ-எ]

## வேட்பு மனு; இன்று கடைசி

புதுடில்லி, ஏப். 26

இந்தியாவின் பத்தாவது நாடாளுமன்றம் 7 சட்ட சபைகள், ஒரு யூனியன் சட்ட சபை ஆகியவற்றின் தேர்தல்களில் போட்டியிடுபவர்கள் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்யும் கடைசி நாள் இன்றாகும். [ஓ-எ]

## செல்வா நினைவு தினம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 26

தந்தை செல்வாவின் 14 ஆவது நினைவு தினம் இன்று ஏப்ரல் 26 ஆம் திகதியாகும்.

## கண்காட்சி

விடுதலைப் புலிகளின் போராட்ட வரலாற்றைச் சித்திரிக்கும் புகைப்படக் கண்காட்சி பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் நடைபெற்று வருகிறது.

கண்காட்சி இன்றும் நடைபெறும். [ஓ]

## விசேட கூட்டம்

மே தினத்தை முன்னிட்டு முக்கிய முடிவினை எடுப்பதற்காக யாழ் மாவட்ட தனியார் கல்வி நிலைய கோட்ட ரீதியான பிரதிநிதிகளும், அங்கத்தவர்களும் இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ் மங்கையர்க்கரசி வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும் கூட்டத்தில் கலந்து கொள்கின்றனர். [ஓ]

## மரண அறிவித்தல்

### தெட்சணாமூர்த்தி இளையபெருமாள்

வல்வெட்டித்துறையை பிறப்பிடமாக கொண்டவரும், வவுனியா புதுக்குளம் சாஸ்திரி கூழாங்குளத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய திரு. தெட்சணாமூர்த்தி இளையபெருமாள் [இளைப்பாறிய இலிகிதரும் வவுனியா பகுதி சமாதான நீதிவானும்] காலமானார்.

அன்னாரது சமக்கிரியைகள் இன்று அவரது மாமியாரது வல்வெட்டித்துறை இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மாலை 5 மணிக்கு ஊறணி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:

[நந்தன் — மருமகன்]

## மேதினப் பேரணியில் ஆசிரியரும் பங்குபற்றுவர்

### இ. த. ஆ. சங்கம் அறிவிப்பு

யாழ்ப்பாணம். ஏப். 26

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி ஏற்பாடு செய்துள்ள மேதினப் பேரணியில், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கமும் இணைந்து கொள்ளத் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக இ. த. ஆ. சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ஸ்ரீலங்கா பேரினவாத அரசு தமிழினத்துக்கு எதிராகப் பிரகடனப் படுத்தியுள்ள யுத்தத்தையும், தமிழர் கல்விக்கு எதிரான ஒடுக்குமுறையையும் கண்டிக்கவும்-

தமிழின விடுதலைக்காகப் போராடும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குத் தமிழ்த் தொழிலாள வர்க்கம் தனது முழு ஆதரவை தெரிவிக்கின்றது என்பதைச் சர்வதேச சமூகத்துக்கு எடுத்துக் காட்டவும்-

எதிர்வரும் மேதினப் பேரணியில் தமிழர் ஆசிரியர் சங்கம் இணைந்து கொள்ளத் தீர்மானித்துள்ளது. ஓ[-5]

## பாடசாலை மாணவரில் 60 வீதமானோர் தோற்றினர்

யாழ்ப்பாணம், ஏப். 26

யாழ் - மாவட்டத்தில் நடைபெற்று வரும் ஜி.சி.ஈ. [உயர் தர] விசேட பரீட்சைக்கு. பாடசாலை பரீட்சார்த்திகளில் 60 வீதமானவர்கள் தோற்றுகின்றனர். ஆனால் தனியார் பரீட்சார்த்திகள் 30 வீதம் மட்டுமே தோற்றுகிறார்கள்.

இவ்வாறு யாழ்- கல்வி அலுவலக அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

இதேசமயம்-

நேற்றுக் காலை முதல் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்ட போதும் மூன்றாம் நாளான நேற்று ஜி. சி. ஈ. பரீட்சை வழமைபோல் நடைபெற்றது.

நகரப் பகுதி பரீட்சை நிலையங்களில் பரீட்சார்த்திகள் முந்திய நாட்களைப்போலவே சமூகமளித்திருந்தனர்.

நகருக்கு வெளியே கிராமப்புறங்களில் உள்ள பரீட்சை நிலையங்களில் எதிலும் அசம்பாவித சம்பவங்கள் நடந்ததாகத் தெரியவரவில்லை, [ஓ-3-5]

## கல்விக் கோட்ட ரீதியாக அதிபர்கள் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஏப். 26

யாழ்ப்பாணம், வடமராட்சி, தென்மராட்சி, பண்டத்தரிப்பு கல்விக் கோட்டப் பகுதியில் கடமை புரியும் சகல அதிபர்களையும் கல்வித் திணைக்களம் நடத்தும் கல்விக் கருத்தரங்கில் தவறாது கலந்து கொள்ளும்படி அவ்வப்பகுதி கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் வேண்டியுள்ளனர்.

கோட்ட ரீதியாக கருத்தரங்குகள் நடைபெறும் விவரம்:-

★ யாழ்ப்பாணம் — 27 ஆம் திகதி (சனிக்கிழமை) காலை 9 மணி - யாழ் இந்து மகளிர் கல்லூரி மண்டபம்.

வடமராட்சி — சனிக்கிழமை பிற்பகல் 2 மணி- வட இந்து மகளிர் கல்லூரி.

★ தென்மராட்சி— ஞாயிறு பிற்பகல் 2 மணி- டிறிபேக் கல்லூரி.

★ பண்டத்தரிப்பு— ஞாயிறு பிற்பகல் 2 மணி- பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி. [உ-ஓ]

# மரண அறிவித்தல்கள்

## முருகேசு சிவபாதசுந்தரம்

[ஓய்வுபெற்ற உப அதிபர் இந்துக் கல்லூரி மானிப்பாய்]

மு. சிவபாதசுந்தரம் காலமானார். இவர் வீமன்காமம், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும். மூனாமலை, மானிப்பாயை வதிவிடமாகவும் கொண்டவர்.

இவர் பரஞ்சோதியின் அன்புக் கணவரும், டாக்டர், சுலாவல்லி [அமெரிக்கா] பேராசிரியர் பரமேஸ்வரன் [அமெரிக்கா], பொறியியலாளர் சுந்தரேஸ்வரன் [கனடா], வின் தகப்பனாரும், டாக்டர், சிறீசரன் [அமெரிக்கா], மாலினி [அமெரிக்கா] யினது மாமனாரும், யசோதா, அரவிந்தன், ஷாமினியின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 25 - 4 - 91 வியாழக்கிழமை நடைபெற்று பூதவுடல் பிப்பிலி மயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது.

உறவினர்கள், நண்பர்கள் தயவு செய்து இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

[மனைவி]

மூனாமலை ஒழுங்கை,
மானிப்பாய். ]16608]

## வேலுப்பிள்ளை சிவசம்பு

யாழ்ப்பாணம் கந்தர்மடத்தைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சிவசம்பு கடந்த புதனன்று கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற பொன்னம்மாவின் கணவரும், ஸ்ரீகாந்தவேல் [டோகா], யோகேஸ்வரன் [ஓமான்] ஆகியோரின் தந்தையும், சந்திரமோகனா, கிருபா ஆகியோரின் மாமனாரும், தனேஷன், தினதர்ஷன், துமேஷன் ஆகியோரின் பேரனும், திருமதி மாணிக்கத்தின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை [27-4-91] கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

கொண்டாவில் மேற்கு திருமதி ஸ்ரீகாந்தவேல்

[C/5138[

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 392/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 26 - 04 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org